உ

ஶிவாய நம:

விபூதிமாகாத்மியம்

[illegible] |
[illegible] ॥
[illegible] |
[illegible] ॥ த்ரி
புண்ட்ரதாரணம் [illegible]
[illegible] விஶேஷ
த:॥ [illegible]
ஶ்ருதி: [illegible]
[illegible]॥ த்ரிபுண்ட்ரதாரணம் [illegible]
[illegible]॥ [illegible] ஶிவஸாயுஜ்ய
[illegible]॥

பற்பல வேதமுடிவுகளில் சத்தும் சித்தும் ஆனந்தமுமாய் அமைந்தது என்றும் தமது திருத்தொண்டர் திருவுளங்களிக்க ஓர் திருவடிவம் தாங்கி, அதனால் அவரது ஸாலம்பசமாதியை நிறைவேற்றுவதும் அதர்வசிகை முதலிய உபநிடதங்களில்மும்மூர்த்திகளுக்கும் முதல்மூர்த்தியெனப் புகழப்பட்டதும் சுருதிகளால் உலகெலாங்கடந்த உண்மைப்பொருளென எடுத்துக்கூறப்பட்டதும், விதண்டாவாதிகளை ஒழித்த நாவன்மை பூண்ட ஸ்ரீமத் சங்கராசாரியர் ஸ்ரீவித்தியாரண்ணியர் ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதர்

அவர்கள் முதலிய மாமுனிவர் குலதெய்வமும் ஸ்ரீமத் வாதராயணமாமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய ஸ்ரீபிரமசூத்திரங்களின் உட்கருத்தாயமைந்ததும் தமதாஞ்ஞையாய வேதாகம தருமசாஸ்திரங்களால அனேக ஜீவவர்க்கங்களை ஆண்டுவருவதுமான ஸ்ரீபரமசிவமே உலகவத்துக்களில் சிறந்ததென்றும், உலகத்தார் உபாசித்து நற்கதிபெறப் பெருங்கருவியென்றும் அனேகவேதங்கள் ஓதிநிற்கின்றன. அன்றி எமக்கு அன்னைபோன்ற சுருதி தமது அருமக்களாய நம்மைநோக்கி அநாதியில் எமக்கு நிகழும் அவித்தையை ஒழித்துப் பரமானந்தப்பெருவெள்ளப் பெரும்போகம் விளைவிக்கக்கருதி 'எல்லாவற்றையும் துறந்து சிவனையே வழிபடுக' என்று உபதேசித்து, இனி உபதேசிக்கவேண்டிய விஷயம் மற்றொன்று இல்லாமைபற்றி அதுமட்டில் தாம் முடிவெய்தியதை மற்றவரறியத் தம்முடிவைத்தாமே வெளியிட்டும் அநேக தருமங்களை வெளியிட்டும் முடிவில் அதே முடிவுரையாய்க்கொண்டு முடிந்தது. இவ்வேதம் அனேக தருமங்களை எடுத்துப புகட்டியும், அம்மட்டில் தாம் போதித்த பரமசித்தாந்தத்திற்குப் போதாமை எண்ணிப் பரமார்த்தாங்க சாதனமாய்த் திருநீற்றையே கூறிநின்றது. இனித் திருநீறு தரித்தல் மோக்ஷசாதனம் என்பதை எடுத்துக் குறிக்கும் வசனங்கள் பலவுளவேனும் அவைகளை வேதங்களைக் கற்றுணர்ந்தவர்க்கெடுத்தோதவேண்டுவதில்லை. இதற்கெனப் பிரமாணங்களும் "எங்கோ ஒரு உபநிடதத்தில் ஓர் வசனத்தில் இது குறிக்கப்பட்டது. சில நிபந்தனைகள் இதை அநுசரித்துநின்றன. ஓர் புராணத்தில், ஓர்மூலையில் இதற்குச்சாதகமான சில வசனங்களுள. இதை ஓர் பண்டிதர் ஒப்பினர்" "தமிழ்நாட்டில் ஓர்வகைப் பிராம

ணர் அனுஷ்டிக்கின்றார்" என்றுதொடங்கித் தேடி எடுக்கவேண்டுவதில்லை. ஏனெனில், அநேக வேதங்களும் பல புராணங்களும் பற்பல இதிகாச வசனங்களும் இவ்விஷயத்திலிருக்கின்றன. ஆரியமதஸ்தர்களுள் பெரும்பான்மையோர் ஒப்பியனுஷ்டிக்கின்றார்கள். எல்லா வருணத்தவர்களும் இதைக்கைக்கொண்டார்கள். ஆகலால் இதன்பெருமை எடுத்துரைக்கவல்லான் எவனுமில்லை. ஆதலாற்றான் ஸ்ரீகாலாக்கினி ருத்திரோபநிடதத்தில் "மோக்ஷமடைய விரும்புவான் தனது பிறப்பற இதைக்கொள்வானாக" என்று எழுதப்பட்டுளது. இதே பொருளை அதர்வசிகையும் வெளியிட்டது. அங்ஙனமே "முமுக்ஷுவே அதற்கதிகாரி" யெனப் பிருகஜ்ஜாபாலம் பஸ்மஜாபாலம் முதலிய அநேக உபநிடதங்கள் கூறுகின்றன. இங்ஙனமிருக்க, தற்காலத்தில் சிலர் தமது கன்மபரிபாக வலிமையாற் காரணமின்றி நமது சிவசாஸ்திரங்களில் வெறுப்புற்று அவற்றையும் அதின்படி நிற்பவரையும் அவர்கொண்ட திருநீற்றையும் அந்தோ! கடிந்துவருகிறார்கள்; அதை அவைதிகமென்கிறார்கள்; மற்றும் தாந்திரிகம் எனவும் கூறுகின்றார்கள்; வேதங்களினின்று ஒருவசனமாவது 'அத்திருநீறணிதல் கூடாது' என எடுத்துக்காட்டாது வீண்வாதம எய்திப் பல புராணாதி வசனங்களைக்காட்டிப் பகட்டிவருகின்றார்கள். இவர் எவ்வளவு புராணவசனங்களை எடுத்துக்காட்டி எட்டை நிறப்பினும் கதிரவன் ஒளி வீசக்கண்ட இருள்போல் வேதவாக்கியங்கள் இத்திருநீறணிதலை விதிக்க மற்றெந்தப்பிரமாணந்தான் அதைத் தடுத்து வேறு சித்தாந்தம் செய்யுமோ பார்ப்போம்! வைதிகராய நம்மவர்க்கு வேதத்திற் சொல்லியதே உடன்பாடு. அதை மற்றைய வழிநூல்கள் ஒப்பினும் ஒப்பாவிடினும்

எமக்கும் யாதும் குறைவில்லை. இப்பொழுது "ஊர்த்துவ புண்டரமாகாத்மியம்" என்னும் ஓர் சிறு புத்தகமியற்றிய ஒருவர் திருநீறணிதல் "தாந்திரிகம்" என்றார். இஃது மிக வியக்கத்தக்கதே! அவர் தமதபிப்பிராயமே வேதத்துக்கு முள்ளதென்றார். அதற்கென அவர்காட்டிய காரணங்கள் வருமாறு:—

1. வாசுதேவ உபநிடதத்தில் ஊர்த்துவபுண்டரத்தை விதிக்குமிடத்து "இஃது வைதிகரான பிராமணர்களுக்குரியது" என்றிருக்கத் திருநீறணிய வகுத்த காலாக்கினிருத்திர உபநிடதம்முதலியவை அங்ஙனம் எடுத்தோதவில்லை.

2. அங்கு தாந்திரிகர் எனச்சொல்லத்தக்க சைவர் பாசுபதர் சாம்பவர் என்பவரே அதிகாரிகளாகக் குறிப்பிடப்படுகின்றார்கள். "பாசுபதர்" என்பவரோ தாந்திரிகர் என்பது சிவபுராண சூதசங்கிதையிற் சொல்லப்பட்டது.

3. பாத்தும புராணத்திலும் பாஞ்சராத்திரத்திலும் இத்திருநீறு தரித்தல் மிகக்கொடிய பாவம் என்றிருக்கின்றது." என்பன இவைகளை நன்றாக விரித்து மறுப்பாம்.

விபூதிதரித்தல் அவைதிகம் என்பதற்குமுதற்காரணம், கோபிசந்தனம்போட விதித்தவிடத்து அதை "வைதிகப பிராமணர் தரிக்கவேண்டும்" என்று இருத்தலேயாம். எமக்கு வாசுதேவோபநிடதத்தில் இவ்வசனம் இருப்பதில் யாதும் சமுசயமில்லை. ஆயின் அதைக்கொண்டு திருநீற்றை அவைதிகம் எனக்கொள்ளுதல்மட்டில் அமையாது. இனி எங்கெங்கு 'இதைவைதிகா செய்ய' என்று எடுக்கப்படவில்லை! அது அவைதிகம் எனில் சந்தியாவந்தனம் அக்கினிகாரியமுதலிய எக்கருமங்களும் வைதிகங்களா

வது மிகக்கடினம்மல்லவா? வேதங்களில் விதித்தஇக்கரு மங்களை வைதிகரேசெய்யவேண்டும் என்று எங்கும் எடுத் துரைக்கப்படவில்லையே. இனி அப்படியிருப்பினும் இல் லாவிடினும் குற்றமில்லை. அங்கு திருநீறணிய வதிகாரிகள் பாசுபதர் முதலியோர் என்பதால் தாந்திரிகரே அதற்கதி காரிகளாகின்றார்கள் எனில், இவரை நாம் சில கேள்விக ள் கேட்போம். ஐய! தாந்திரிகம் என்றால் என்ன? அவை வேதங்களிலும் உள்ளனவோ? அங்ஙனமாயின் இவைக ளைத் தாந்திரிகங்களென்றுவது வைதிகமென்றுவது பகு த்தறிவதெப்படி? தாந்திரிகரைக்குறிக்கும் பதமே அப்ப டிச்சொல்லக்காரணம் எனில் "தாந்திரிகரைக் குறிக்கும் பதம்" என்றால் அவரைமட்டிற் குறிக்கும் பதமா? அல்ல து அவரையும் வைதிகரையும் சேர்த்துக் குறிக்கும்பதமா?

முற்கூறியபடியெனின், பாசுபதமென்னுஞ்சொல் தா ந்திரிகரைமட்டிற் குறிப்பதல்ல. அப்பதம் தாந்திரிகரைக் குறிக்குமென்பதற்கு நமதுநண்பர் எப்புராணவசனத்தை எடுத்துதகரித்தாரோ அதை உற்றுநோக்கினால் அது வை திகரையுங் குறிக்குமெனபது இவர்க்குத் தெற்றெனப்புல ப்படும். அவ்விடம் பாசுபதர்களை இருவகைப்படுத்தி வை திகபாசுபதரென்றும் அவைதிகபாசுபதரென்றும் எழுதப் பட்டிருப்பதை இவர் இனியேனும் அறிந்தடங்குவாராக. இவர்கொண்ட அகாரண சிவத்துவேஷம் இவரை மேனோ க்கவொட்டாது தடுத்ததுபோலும். இனிப் பிற்கூறியபடி ஒப்புவாரெனின், தீக்ஷைமுதலிய பதங்கள் வேதசிவாக மங்களிற்கூறிய இருவகைத் தீக்ஷைகளையுங் குறிக்குமாத லால் வேதங்களிற் பல கன்மங்கள் தாந்திரிகங்களாய் ஒழி யும். இனி இவ்விதம் யுக்தி எழுதுவது இவர்போல்வார்க்கு ஒப்பத்தக்கதேனும் இதனை மற்றைய அறிஞர்கள்ஒப்பாரோ

ன்பது வாய்மையாம். இனிமுடிவில் சமதுநண்பர் தம்மேற் குற்றமில்லாது ஒதுங்கவேண்டிச் சிவனடியார்களுக்குத் திருநீறே உரியதென்றும் வைணவர்களுக்குத்திருமண் உரியதாமென்றும் ஒருவாறு தாம் கண்ட உண்மையைஎழுதி வைத்தாரெனில், திருநீறு அணிதற்கதிகாரிகள்முமுக்ஷுக்களேயன்றிப்பிறரன்று. எங்கும் திருநீறணிதலின்பயன் குறிக்குமிடத்து மோக்ஷமே பயனாகக் குறிக்கப்பட்டிருக்கின்றது. ஆகலால் அதன்பயன் மோக்ஷமேயென்று ஏற்படுகின்றது. அதிகாரியும் முமுக்ஷுவென்றே ஒவ்வோருபநிடதங்களிலும் குறிக்கப்பட்டிருக்கின்றது. இனி காலாக்கினிருத்திரோபநிடதமுதலியவற்றில் முமுக்ஷுவே அதிகாரியென்று கூறப்பட்டிருத்தலால் "வேதங்களெல்லாம ஒருபொருள் கொண்டன" வென்னும் நியாயத்தால் மற்றைய உபநிடதங்களும் அவ்வதிகாரியைக் கொண்டு முடிதலறிக. இனி இதமபர (அதற்கெனச் சிறப்பாயெழுந்த(சொற்றொடர்பினும் அங்ஙனமில்லாச்சொற்றொடர்பு, (பலவிஷயங்களைப் பொதுவாய்க்குறிப்பது) பிரமாணமாந் தன்மையிற் குறைவுடைத் தென்பதை நீரும் ஒப்ப வேண்டுமே. ஆதலால் பஸ்மஜாபாலம் பிருஹஜ்ஜாபாலம் காலாக்கினிருத்திரம் இவ்வுபநிடதங்கள் திருநீற்றின் பெருமையை விளக்கவே சிறப்பாகவெழுந்தனவாதலால் அவைகளைப் பின்பற்றியே மற்றைய வாக்கியங்களையும் பொருள்படுத்தவேண்டும். அவ்வுபநிடதங்களில் 'எல்லா வேதங்களிலும் வேதவாதிகளாற் கூறப்பட்டுள்ளது' என்னும் "திருநீறுவைதிகம்" என்னுந் தொடங்கி அத்திருநீற்றை வைதிகமென வெளியிட்டிருக்க, அதைத்தழுவியே அநேக சங்கதிகளுடன் திருநீற்றையும் விரித்த அதர்வசிரசின் வசனமுமுடிவெய்தவேண்டும். இனி இதன்வலிகொண்டு

அவ்வுபநிடதங்களில் திருநீறு வைதிகமென்பதை மாற்ற எவ்வாற்றானும் முடியாது. அங்கு எடுத்தோதிய பாசுபதமென்னும் பதம் வைதிகர் தாந்திரிகர் இருவரையும் குறிக்கும் பொதுச்சொல்லாதலாலெனக. இவ்விதம் வேதம் என்னும் பதமும் சுருதியென்னும் பதமும் ஓர்காலத்தும் தாந்திரிகரையே குறிக்கும் சொல்லாகமாட்டாது. விசேடச்சொல்லாகிய வேதமுதலிய சொற்களால் திருநீறு வைதிகமெனச் சித்திக்கது. ஆகலால "சாகயல்லவோ மந்திரவருணத்தால்" என்று ஆசிரியர் ஜைமினியாரெடுத்தோதிய நியாயத்தால் பொதுச்சொல்லாகியபசுவென்னுஞ்சொல் சிறப்பாகிய சாகத்தைக் குறித்தது போல் வைதிக தாந்திரிகர்களுக்குப் பொதுவாய்ப்பாசுபதமென்னுஞ் சொல் சிறப்பாய் வைதிகரிடத்தே பொருட் பொருத்தமுடைத்தெனத் துணிக. இனி வேதங்களிலும் தாந்திரிகங்களான கன்மங்கள் ஓதப்பட்டனவென்றெடுத்து வேதங்களிற் சிலபாகங்கள் மோகசாஸ்திரங்களென மொழிதல் வேதியர்க்கழகாமோ! இனி வேதங்களிற்கூறப்பட்டுள்ள எக்கன்மமேனும் மூற்றிலும் தாந்திரிகமெனக் கூறத்துணிந்த ஓர் வேதியனும் உலகத்திலுளனோ! தந்திரங்களிலும் சொல்லப்பட்டன தாந்திரிகங்களெனச்சொலலும் பொருந்தாது. சந்தியாவந்தன முதலியவையும் அத்தன்மைத்தாதலினெனக. இனி விதண்டாவாதியாய் நின்று விபூதி தாந்திரிகமென்பீரேல், சைவதந்திரங்களில் எங்கும் யாகம்.சந்நியாசம் இவைகூறப்படாமையால் அக்கினிஹோத்திரத்தில் உண்டான திருநீறும் அதைத் தரிக்கும் ஓர் சந்நியாசியும் கிடைப்பதெங்ஙனம்? அஃதனை யாதுபற்றித் திருநீறு வைதிகமென்பது மாலயன்முதலிய கடவுளராலும் மறுக்கப்படாத சித்தாந்தமெனத் துணிக.

இனி இவர் மனங்களிக்க அப்பாசுபத பதத்துடன் கூடிய சொற்றொடர்பால் விரிக்கப்படும் இத்திருநீறு அவைதிகமென ஒப்பினும் ஜாபாலோபநிடதத்தில் "சிவாக்கினியில் உற்பத்தியானது சிவயோகிகளுக்கு" என ஓர்வகைச்சைவர்களாகிய சிவயோகிகளை நோக்கி விதிக்கப்பட்ட திருநீற்றைப்போல் இதுவும் அமையுமென்றறிக. அதுகொண்டே திருநீறெல்லாம் தாந்திரிகமெனக்கோடல் உண்மையறியவிரும்பும் உயர்ந்தோர்க்கழகன்று. இவர் அறிந்தமட்டில் திருமண் திருநீறு இவ்விரண்டும் முமுக்ஷுகளுக்கே என ஏற்படினும் அதை விகற்பமாய், யாகத்திரவியத்தை நெல் அல்லது யவம எனக்கொண்டதுபோல் ஏன் கொண்டாரில்லையெனின், அவ்விஷயத்தில் அவர்கொண்ட பாமேசுவரத் துவேஷம் அவர் கண்களையும் செவிகளையும் அவ்வுபநிடதங்களை முற்றிலும் அறியவொட்டாது தடுத்தாட்கொண்டு அவ்வாசுதேவோபநிடதத்தின் கண்ணே திருப்பி "முமுக்ஷுவானவன் இதைத் தரித்தல் வேண்டும். "தரிப்பதால முத்தியைக்கொடு" என்னும் இவ்விரு வசனங்களைப் பார்க்கச்செய்ததேயன்றிக் காலாக்கினிருத்திரமுதலிய உபநிடதத்தில எடுத்துப் பன்முறை ஓதப்பட்ட முமுக்ஷுபதத்தை மறைத்தது. பாருங்கள்! இவர் பிரமதேவன்முதலியோர் கோபிசந்தனம் தரித்தாரென வாசுதேவோபநிடதம கூறுவதால் அதைமட்டிற் புகழ்ந்தாரேயன்றிப் பல வேதபுராணங்களில் நாராயணன் முதலியோர் திருநீறு தரித்ததாகவிருப்பதை இவர் அறிந்திலர். அங்ஙனம அவ்வாசுதேவோபநிடதத்திற்கேட்ட நாரதரை இவர் வெகுமானிக்கதுபோல் ஜாபாலத்தில் இத்திருநீற்று மான்மியத்தைப் பரமேஸ்வரனிடத்தில் கேட்ட ஸ்ரீமந்நாராயணனை வெகுமானிக்காதது யாதுகாரணம்பற்றியோ!

யாஞ்ஞவல்கியர், ஜனகர், சுகர், வாமதேவர்முதலிய மகரிஷிகளைச் சிஷ்டரெனக்கொள்ளாது எங்கேயோ தமிழ்நாட்டு வேதியருள் ஓர்பாலரான வடம்தசவடமர்களைச்சிஷ்டர்களாகக்கொண்டார். இஃதென்ன விந்தை! இவர்கொள்கையின்படி அம்மரபினரேனும் முழுவதும் நமது நண்பர் சொல்லியபடி சிஷ்டர்களாவரோ வென்பதைபபற்றிச் சிறிது ஆராய்வாம. அவர்களிலும் பெரும்பான்மையோர் திருநீறு திருக்கனமணிமாலை பூண்டொழுகின்றார். காஞ்சிமண்டலத்தில் அம்மரபினரெல்லோரும் திருநீற தரித்துவருகின்றார்கள். அவர்களுட்சிலர் ஏதோ காரணவசத்தால் தென்னாட்டுள் புகுந்து இவ்வகை கோபிசந்தனமுதலியவற்றை அணிந்தாரென்றே ஊகமுடையோர் அறிகின்றார்கள். இனி கோபிசந்தனமணிவோரும் நமது நண்பர் கூறியவாறு நடுவில் வெளியிட்டுத் தரிப்பதில்லை. ஒருக்கால நமது நண்பர கோபிசந்தனம் தரிக்காதவரையும் நடுவில வெளியிலலாபபுண்டரம் அணிபவரையும் அசிஷ்டரெனக்கொள்வரேல் இவர் ஒப்பத்தக்க ஓர் சிஷ்டரும் உலகத்திரார். அந்தோ! வெளியுள்ள புண்டரந்தரிப்போரெல்லாம் வெண்மண்கொண்டே தரிக்கின்றார்கள். கோபிசந்தனமணிபவரெல்லாம் வெளியற்றதாகவே தரிக்கின்றார்கள். நமது நண்பர் எடுத்துக்காட்டிய "(இடைவெளியில்லாத ஊர்த்துவபுண்டரத்தை எவ்வந்தண அதமன் தரிப்பான் அவன் அங்கு தன் பிராட்டியாருடன் எழுந்தருளிய திருமாலை மறைப்பான்; இடைவெளியில்லாத ஊர்த்துவபுண்டரததை எவ்வந்தணர் தரிப்பார் அவர் நெற்றியில் நாயின் அடியைத் தரிக்கின்றார்கள்') என்னும் இவ்விருவசனங்களால் அவ்வித கோபிசந்தன மணிபவர்கள் அரித்துவேஷிகளும் நாயடியைத் தரித்தும் அசிஷ்டர்களு

ம் ஆகின்றூர்களே! இனி இவர் கூறும் புண்டரத்தைத் தரித்தவர் சிஷடர் என்றும் அவ்விதச் சிஷ்டர் தரித்தால் அப்புண்டரம மேன்மையுடைத்தென்றும் கூறத்துணிவ ரேல் இதனுல் ஒன்றையொன்று பற்றுதலென்னுங்குற்றம இவரை விட்டொழியாது. இதற்கு ஏதேனும ஒரு சமா தானம் இவர் உணர்ந்திடினும் இவர் கூறியபடி கோபிசந் தனத்தால் இடைவெளியுள்ள புண்டரத்தைத் தரிக்கும் சிஷ்டர் இவ்வுலகததில் எங்குங்காணேமே! ஓர்கால் "எம து ஆசிரியர் புதிதாய்க்கண்டுபிடித்த இமமதத்தை அநுஷ் டிக்கும சிஷ்டரும் வடதேசவடமர்களுமாகிய நாங்களி ருக்கின்றேம்' என்று கூறிடுவரேல் சிஷ்டரென்னுஞ் சொலலுக்கு இனி இவரிடம் நாம பொருள் தெரிந்துகொ ள்ளவேண்டுமேயன்றி அதற்கு வேறுவழியில்லே. உண்மை யில் இவர் கூறியவாறு புண்டரந்தரிப்பவர் ஐவரோ அறுவ ரோ உளர். அவருள் அவ்வடதேசவடமரென்பவர் இரு வர் மூவர். இப்பதினெட்டுககோடி ஆரியர்களின் ஆசார நிர்ணயத்துக்கு இம்மூர்த்திகளே போதும்! போதும்!! ஒரு சமயம் அவர் தாமே சிஷடரெனக்கொள்ளினும் இம் மூவர் தரித்த ஊர்த்துவபுண்டரத்துக்கு மாகாத்மியம அமைதல் யாங்ஙனமோ? ஐயோ! பரிதாபம்! பரிதாபம்! இவர் இங்ஙனம் எழுதியாவது தம்மனத்தை ஒருவாறுதிரு திருப்திசெய்து கொள்ளுவாராக. அவர் என்செய்வார்! அவர் வழிபடுங்கடவுளாகிய விண்டுவும் அவர் மதத்தின ரும அவர் மதக்குறிகளும மாறிமாறிப் பல திருவுருவங்க ளைப்பெறுகின்றன. மதத்தவர் ஓரிடம் பக்ஷபாதத்தால் மற்றதைத் தூஷித்தலேயே விரதமாகக் கொண்டவர்கள். இவர் நிபந்தனைக்காரர்கள் எழுதியவாக்கியங்களைக்கொண் டு அவர் எழுதிய சித்தாந்தங்களுக்குமாறுகோளாய்த்தாம ஒவ்வோர் புண்டரத்தவர் மற்றவர் புண்டரத்தைத் தூஷி த்தலே இன்றியமையாதெனச் சித்தாந்தமாக்கின்றனர். நமது நண்பர் இச்சிவதர்மத்தைவெறுத்ததுபோல யாமும் வைணவதர்மத்தை வெறுத்தெழுத எமது தூலிகை இட ந்தந்திற்றிலது. எமதபிப்பிராயம் யாதெனில, மேன்குல த்தார் கொண்டதும் விடே பபனுகக்கொண்டதும் பர

மேசுவரனது பரமபிரீதிக்கிடமானதும் சர்வவேதங்களி லும புகழப்பதம்பெற்றதும் பல்லாசிரியர்கள் அநுஷ்டித்த தும் ஸ்ரீபோதாயனமுனிவர்முதலிய பலமுனிவர் எடுத் தோதியதும் வீடுபெற விரும்புவோர்க்கென முன்வந்த தும தாந்திரிகர் வைதிகர் எனுமிருதிறத்தார்க்கும் இன்றி யமையாததுமாண இத்திருநீறணிதலே நமமவர்க்குப்பரம தர்மமெனபதாம். இனிப் போதாயனமகரிஷியினது திரு வாக்கும "பூதியைத்தவறற்க" என்னும் வேதவாக்கியத் தைத் திருநீறணிதற்பொருட்டாய்விளக்குகின்றது. ஜாபா லத்தில் திருநீற்றின் எண்பெயர்களைக் குறிக்குமிடத்து "ஐஸ்வரியகாரணமாதலாற் பூதியெனப்படும்" எனப் பூதி யென்னுஞ்சொல்லின் காரணப்பொருள் வெளியாகின்ற மையால அதேபொருளை ஸ்ரீமது ஆசிரியர் சங்கரமாமுனி வரும் மனத்திற்கொண்டு 'ஐஸ்வரியகாரணத்தைத் தவற ற்க' என்று பொருள்படுத்தி ஜாபாலம், தைத்திரியம் இவ் விரண்டு உபநிடதங்களையும் ஒருபொருளுள்ளனவாகமுடி த்தார். மேலும் 'இவையெல்லாம் ப்ரம்மன், விட்டுணு, ருத்திரன் இந்திரன், அவாகள் பிறக்கின்றார்கள். காரண ம பிறப்பதிலலை' என்று தொடங்கி 'மற்றமெல்லாம விட் டொழித்து மங்களத்தை அளிக்கும் சிவனே தியானிக்க ற்பாலன்' என்று முடிந்த அதர்வசிகோபநிடதத்தாலும் மும் மற்றும் பல உபநிடதங்களின் பல வசனங்களா லும் அப்பரமசிவனே பரப்ரம்மவஸ்துவென விளக்கியிரு த்தலாலும் அஃது மற்றெவ்வாறிகளாலும் மறுக்கக்கூடா மையானும் அவனது வழிபாட்டுக்குஇன்றியமையாத இத் திருநீறணிதல் பிரமவித்தையின் அங்கமென்றே நாம் ணிதுந்து கூறுவாம். இனி விரிவைப் 'புண்டரமாகாத்மி யம்' என்னும புத்தகத்திற்காணக.

இனிப் பலவிஷயங்களைச்சேர்த்து வெகு விரிவாய் 'வை திக புண்டர வைஜயந்தி' என்னும் புஸ்தகத்தை ஒருவர் எழுதியிருக்கிறார். மகிமைஅளவில்பெருமைபெற்ற அத்தி ருநீற்றுக்கு அதுவும்ஒருசிறிதேயென்பது எமதுகொள்கை. ஆதலால் நாம் நண்பர் எடுத்துக்காட்டிய நிந்தாவசனங்க

ள் "கஹிஷிக்கை" யாய் ஒழியுமென்றெதுக்குக. கவி தார்க்கிக ஸிங்கமென்னும் ஓர் பரசமயாசாரியர் தாமெழுதிய "பாஞ்சராத்திரரக்ஷை" என்னுங்கிரந்தத்தில் 'பாஞ்சராத்திரத்தில் வைகாநசத்தையும் வைகாநசத்திற் பாஞ்சராத்திரத்தையும் தூஷித்திருக்கின்றனர். இதற்குக்கதியாதெனவினவின் இஃது மற்றொருவரால் எழுதப்பட்டிருக்கலாம்; அல்லதுஒன்றைப்புகழவேண்டி மற்றொன்றைநிந்தித்திருக்கலாம் என்றிருப்பதை இங்கு ஒருவாறுகூட்டுக. இங்குமுடிபுரைஇது:—"இக்காசாஸ்திரத்தின் கண் எனது மதத்தை எவர்கள் அநுட்டிக்கின்றார்களில்லையோ" என்று தொடங்கித் தனது மதத்தை அநுட்டிக்காதவர்களைப்பற்றி நிந்தித்திருத்தலாலும் ஜாபாலோபநிடதத்தில் "பரமேஸ்வரனது திருவருளால் விஷ்ணு இத்திருநீற்றுமான்மியத்தைப்பற்றி வெளியிட்டார்" என்றிருத்தலாலும் எல்லாப்பூதங்களிலும் இருதயத்தின் கண் "ஓ அர்ச்சுன! ஈஸ்வரன் இருக்கின்றான்—ஓ பாரதா! அவனையேமுழு நம்பிக்கையுடன் சரணடை" என்றுகீதையின்கண் ஸ்ரீகண்ணபிரான் கூறியிருத்தலாலும், அதுவே ஸ்ரீவாசுதேவனது கொள்கையாதலால் அதை ஒவ்வொரு பாகவதர்களும் அநுட்டித்தல் இன்றியமையாது. அநுட்டிக்காதவர்க்குப் [illegible]லும் பசுபதியின் கிருபை கிடைத்தலும் அரிதெனஅறிக. ஆதலாற்றான் ஆசிரியர் அரதத்தனார் 'பிரமனையும் விஷ்ணுவையும் மற்றைய தேவர்களையும் வழிபடுவது பயனுள்ளதேயாயினும் "யதாசர்வது" என்று தொடங்கிய மந்திரம் உம்மிடம் அன்புற்றவர்க்கு மற்றைய கடவுளரை வழிபடும் எழ்மையைப்பொறுக்காது' என்பதாகிய எழுதினார். விரிக்கிற்பெருகும்.

சுபம்.

முற்றிற்று.
